**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28–ஆம் நாள் வியாழன்கிழமை**

**IA.06/2025 in OS.188/2019**

வெங்கடேசன் ... மனுதாரர்

/எதிர்/

காசிநாதன் ... எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 11.08.2025 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.மா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.உத்திராபதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. இம்மனுவானது கடந்த 20.02.2025 அன்று மனுதாரருக்கெதிராக ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து மேல்நடவடிக்கைக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று சி.பி.சி. ஆர்டர் 9 ரூல் 7 மற்றும் Section 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மேற்படி வழக்கில் கடந்த 20.02.2025ம் தேதி PW1ஐ பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி தேதியில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்திற்கு வரஇயலவில்லை என்றும், மனுதாரர் வராததால் மேற்படி வழக்கில் தோன்றாதரப்பினாராக கருதி Exparte உத்தரவு ஏற்பட்டுவிட்டது என்றும், இது வேண்டுமென்றோ அலட்சியத்தினாலோ ஏற்பட்டதல்ல என்றும்,

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN Date: 2025.08.28 11:56:03 +0530

தெய்வாதீனமாக ஏற்பட்ட நிகழ்வு என்றும் ஆகையால் கடந்த 20.02.2025 அன்று மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட Exparte உத்தரவை ரத்து செய்து மேல்நடவடிக்கைக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:**

3. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவை அல்ல என்றும், மேற்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் 1ம் வாதியை சாட்சியாக விசாரிக்கப்பட்டு அதன் பிறகு மேற்படி வழக்கில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி வழக்கில் பல வாய்தாக்கள் கொடுக்கப்பட்டும், அதில் PW1 ஆஜராகியும் பிரதிவாதி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு நல்ல கட்சி இல்லாததினாலேயே மேற்படி வழக்கினை நடத்தவில்லை என்றும், ஆகவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. எதிர்மனுதாரர் தரப்பு வாதம் 11.08.2025 அன்றும், மனுதாரர் தரப்பு வாதம் 19.08.2025 அன்றும் கேட்கப்பட்டது. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

**பிரச்சனைக்கான தீர்வு:–**

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுமனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN Date: 2025.08.28 11:56:22 +0530

7. மனு, எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கில் கடந்த 13.03.2023ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டு 27.03.2023ல் விசாரணை பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 19.01.2024 முதல் 03.01.2025 வரை வாய்தாக்கள் மாற்றப்பட்டு எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் வாய்தா 21.01.2025 அன்று மாற்றப்பட்டு அன்று வாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 20.02.2025க்கு வாய்தா மாற்றப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் வாதி ஆஜராகி இருந்தார் பிரதிவாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் கடந்த 20.02.2025 அன்று பிரதிவாதியை தோன்றாதரப்பினராக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது பிரதிவாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதை பார்க்கும்போது பிரதிவாதி அசல் வழக்கில் கலந்துகொண்டு வழக்கை மேல்நடத்த முன்வருவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேற்படி அதனை பார்க்கும் போது மனுதாரரின் மனுவினை அனுமதித்து இருதரப்பிலும் விசாரணை செய்யப்பட்டு அதன் மூலம் பிறப்பிக்கப்படும் தீர்வு என்பது ஒரு அறுதியிட்ட தீர்வாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், அப்பொழுதுதான் வழக்கின் உண்மை தன்மையை காண்பதற்கும், வழக்கின் தீர்க்கமான முடிவு ஏற்படுவதற்கும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேற்படி மனுதாரரின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவீனங்கள் ஏற்படக் கூடும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு, செலவுத்தொகையுடன் இம்மனுவை

M S KANNADHASAN

Digitally signed by M S KANNADHASAN
Date: 2025.08.28 11:56:39 +0530

அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. எனவே முடிவாக, மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/–யை வரும் **04.09.2025**ம் தேதியன்று அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

வாய்தா அழைக்க.**08.09.2025.**

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN Date: 2025.08.28 11:56:52 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN Date: 2025.08.28 11:57:00 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.